[20th September 1958

வீஸனில் இதை தடுக்கலாம். இதை எல்லா இடங்களிலும் தடுப்பதற்கு என்ன செய்யவேண்டும் என்பதைப்பற்றி ஆலோசித்துக்கொண்டிருக்கிறோம். கூடிய சிக்கிரம் இதன் பேரில் ஒரு முடிவுக்கு வரலாம்.

Mr. SPEAKER : 377-ம் 378-ம் சேர்த்து ஒன்றாக எடுத்துக் கொள்ளலாம்.

Vedaranyam-Kodaikkarai road

* 377 Q.—Sri A. VEDARATHNAM : கனம் பொது மராமத்து அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) வேதாரண்யம்-கோடிக்கரை ரஸ்தாவுக்கு கப்பி போட்டு தார் போட திட்டம் உண்டா ?

(ஆ) அப்படியானால், அதற்காக எவ்வளவு ரூபாய் அனுமதித்திருக்கிறது ?

(இ) மத்திய அரசாங்கம் இதில் எவ்வளவு தொகை கொடுக்க ஒத்துக்கொண்டிருக்கிறது ?

(ஈ) இவ்வேலை துவங்கியாகிவிட்டதா ?

(உ) இல்லையானால், எப்பொழுது துவக்கப்படும் ?

The Hon. Sri P. KAKKAN : (*a*) Yes, Sir.

(*b*) & (*c*) The work is estimated at Rs. 6·35 lakhs. Against this a grant not exceeding Rs. 4 lakhs has been promised by the Government of India.

(*d*) & (*e*) The detailed estimate is being revised as required by the Government of India. The work will be commenced after the Government of India sanction the detailed estimate.

* 378. Q.—Sri A. VEDARATHNAM : கனம் பொது மராமத்து அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

கோடிக்கரை–வேதாரண்யம் ரஸ்தா கப்பி போடும் திட்டம் வேலை துவக்கியாகிவிட்டதா இல்லையென்றால், எப்போது துவக்கப்படும் ?

The Hon. Sri P. KAKKAN : The approval of the Government of India to the detailed estimate is awaited and the work will be started after it is obtained.

Sri A. VEDARATHNAM : ஸார், 1955-ல் நவம்பரில் எற்பட்ட கடும் புயல் காரணமாக இந்த திட்டத்தை மத்திய சர்க்கார் அனுமதித்தது. இதுவரை அதற்கு ஸாங்ஷன் கிடைக்கவில்லை என்று தெரிகிறது. ஆகவே இந்த அரசாங்கம் மத்திய அரசாங்கத்திற்கு ரிமைண்டர் அனுப்பி இந்த திட்டத்தை நிறைவேற்றுவதற்கு முயற்சி எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

The Hon. Sri P. KAKKAN : முதல் பதிலில் நான் சொன்னேன். இந்த திட்டத்திற்கு முதலாவதாக 4 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருந்தது. அதன் பின்னால் இதற்கு எஸ்டிமேட் தயாரித்தபோது 6·35 லட்சம் ரூபாய்க்கு வந்தது. இந்த அதிகப்படியான தொகைக்கு அனுமதி கேட்பதற்காக மத்திய சர்க்காருக்கு எழுதி அனுப்பினோம். அவர்கள் அதை திரும்பியும் 4 லட்சத்திற்கே எஸ்டிமேட் தயாரித்து அனுப்பும்படி திருப்பி அனுப்பிவிட்டார்கள். ஆகவே அதற்காக வேண்டி சீப்–இன்சினீயருக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. அது வந்தவுடன் நிறைவேற்றப்படும் என்பதை தெரிவித்துக்கொள்ளுகிறேன்.